## இலங்கை கைப்பணிகள் சபை – 2017

இலங்கை கைப்பணிகள் சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் அதிகாரச் சட்டத்தின் 64(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 சாதகமற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களுக்கு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின ஒருசேரவுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய அநேக மூலாதாரங்கள் பொருட்படுத்தக் கூடியவாறு பாதிப்புக்குள்ளாகியிருக்கக்கூடும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 சாதகமற்ற அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களது முக்கியத்துவம் காரணமாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கைப்பணிகள் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் 16

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான கட்டுபெத்தை மற்றும் கெசெல்வத்தை செயற்திட்டங்களில் உள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 14,639,740 கூட்டுத்தொகைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், 16 ஆம் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளப் பெறுமதியிடப்பட்ட நாட் தொடக்கம் மீளாய்வாண்டு வரை அவற்றை தேய்மானம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நியமத்தின் 73(ஊ) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் வேறானதொரு குறிப்பின் மூலம் நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட வேண்டுமாயினும், சபையின் கட்டுபெத்தை செயற்திட்டப் பிரிவினது ரூபா 63,037,977 கூட்டுத் தொகையுடைய நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறாகாத் தெரிவிக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணமான ரூபா 924,194 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, கணக்காய்வுக் கட்டணத்துடன் தொடர்பற்ற ரூபா 863,669 நாட்குறிப்பின் மூலம் கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக குறிப்பிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் என்பன ரூபா 1,787,863 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) (i) தனியார் கம்பனி ஒன்றிற்கு வாடகையாக வழங்கப்பட்ட கட்டிடத்திலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கெனப் பெறப்பட்ட வாடகை வருமானமாகிய ரூபா 800,029 மற்றும் அதன் மின்சாரத்திற்கென அறவிடப்பட்ட ரூபா 133,890 என்பன ஆண்டிற்கான வாடகை வருமானமாகக் கணக்கிலிடப்பட்டதால் மீளாய்வாண்டினது வாடகை வருமானம் ரூபா 933,919 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ii) குறித்த கம்பனி மீளாய்வாண்டிற்கான வாடகையைச் செலுத்துகையில் பெறுமதி சேர் வரியை உள்ளடக்காததால் சபையானது அவ் வருமானத்தில் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரியாக ஏற்பாடு செய்திருந்த தொகை ரூபா 1,385,905 ஆகும்.

(இ) மீளாய்வாண்டிற்கென சபையின் மொத்த வருமானத்தில் 0.5 சதவீதத்தை பொருளாதார சேவைக் கட்டணமாக நிதியேற்பாடு செய்யாமையால் கொடுப்பனவு செய்ய வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 3,108,214 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) சபையானது தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து 4000 டீ சேர்ட்களைக் கொள்வனவு செய்வதற்கு 2017 டிசெம்பரில் ரூபா 1,000,000 முற்பணமாக வழங்கியபோதும் முற்பணக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்தமையால் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் மற்றும் முற்பணக் கணக்கு என்பன அதேயளவு குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(உ) கட்டுநாயக்கா காட்சியகத்தின் வாடகை உடன்படிக்கைப் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கென சபை செலுத்த வேண்டிய மொத்த வாடகை ரூபா 25,146,620 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 28,160,340 ஆக அது காட்டப்படாமையால் ஆண்டிற்கான வாடகைச் செலவினம் ரூபா 3,013,720 அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கைப் பிரகாரம் காட்சியகத்தின் விற்பனைகளது அடிப்படையில் மாதாந்தக் கட்டணம் (Concession Fee) கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும், 2017 டிசெம்பருக்கெனச் செலுத்த வேண்டிய அக்கட்டணத்தை இனங்கண்டு அதனைக் கணக்கிலிடவில்லை.

(ஊ) சபையின் நேரடிக் கையிருப்புச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைக்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிறுத்தல் சராசரி கிரயக் கையிருப்பு ரூபா 435,641,415 ஆகுமாயினும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 457,642,667 ஆகக் காட்டப்பட்டமையால் இறுதிக் கையிருப்பினது பெறுமதி ரூபா 22,001,252 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக் கணக்கு ஒன்றில் இருந்த மீதி ரூபா 1,010,827 ஆகும். இருப்பினும், இது நிதிக்கூற்றில் தெரியப்படுத்தப்படவில்லை.

(ஏ) கையிருப்புக் குறைவையும் மிகையையும் கையிருப்பில் சீராக்கல் செய்து திருத்தத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக தொங்கல் கணக்கு மூலமாக ரூபா 85,854,835 சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காசேடு | 37,818,555 | குறித்த நாட்குறிப்பு 25 |
| (ஆ) | 13 காட்சியங்களில் கையில் உள்ள காசு | 4,673,263 | காட்சியக முகாமையாளர்கள் கையில் உள்ள காசை உறுதி செய்வதற்கான கடிதங்கள் மற்றும் அடுத்த நாள் வங்கியிலிடப்பட்டதை உறுதிசெய்வதற்கான சான்று |
| (இ) | கடன் அட்டைக் கணக்கும் விற்பனை கணக்கும் | 337,822,018 | நாட்குறிப்புக்குரிய அங்கீகாரம் மற்றும் பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்கான தகவல்கள் |
| (ஈ) | வர்த்தகம் அல்லாத முற்பணம் | 5,120,760 | பட்டோலைகள் மற்றும் மீதியைப் பரிசீலிப்பதற்கான எழுத்து மூலச் சான்று |
| (உ) | கட்டுபெத்தை செயற்திட்டத்தின் இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 10,645,350 | நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கைச் சபையினது அறிக்கைகள் |
| (ஊ) | பாணந்துறை கெசெல்வத்தை இலகு பொறியியல் பயிற்சி உபகரணங்கள் | 3,988,500 | நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கைச் சபையினது அறிக்கைகள் |
| (எ) | பெனிவோலன்ட் நிதியம் - நடைமுறைக் கணக்கு | 2,500,000 | 2017 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, வங்கிக் கூற்றுக்கள் |
| (ஏ) | கிராமிய கைத்தொழில் அமைச்சு (கடன் கொடுத்தோர்) | 6,571,317 | கடன் கொடுத்தோர் கோவைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஐ) | பெற வேண்டிய வைப்புகள் | 17,834,050 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஒ) | பெற வேண்டிய வாடகை | 1,133,557 | பட்டோலைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்று, விபரமடங்கிய கோவைகள் |
| (ஓ) | நிறுத்தி வைத்த தொகை - கட்டுபெத்தை | 12,002,564 | மீதியை உறுதிப்படுத்துவதற்கு போதுமான எழுத்து மூல சான்று |
| (ஔ) | வர்த்தகக் கடன் கொடுத்தோர் | 30,695,360 | கடன் கொடுத்தோர் பட்டோலை மற்றும் கடன்கொடுத்தோர் கோவைகள் |
| (க) | விற்பனைப் பொருட் கையிருப்பு (13 களஞ்சியங்களில்) | 28,649,747 | கையிருப்பு உள்ளதைக் குறிக்கும் கையிருப்புக் கணிப்பு அறிக்கைகள் |
| (ங) | இழப்பிற்குள்ளான கையிருப்பு | 19,851,107 | நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள் |

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 45,383,909 கூட்டுத்தொகையுடைய வர்த்தகக் கடன் பட்டோர் மீதியில் 1 ஆண்டிற்குக் குறைவான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 33,046,747 ஆகும். 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 3,545,631 ஆகவும் 3 ஆண்டுகளும் அதற்கு மேற்பட்டதுமான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 8,791,531 ஆகவும் இருந்ததுடன், இக் கடன் மீதி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய வர்த்தக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 376,117,747 ஆகும். இதில் 1 ஆண்டிற்குக் குறைவான மீதிகளது கூட்டுத் தொகை 186,583,251 ரூபா ஆகும். 1 முதல் 2 ஆண்டுகள் வரையிலான மீதிகளின் கூட்டுத் தொகை 73,547,495 ஆகும். 2 முதல் 3 ஆண்டுகள் வரையிலான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 24,329,151 ஆகும். 3 ஆண்டுகளும் அதற்கு மேற்பட்டதுமான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 91,657,850 ஆகும். இக் கடன் மீதி நிலுவைகளைக் கொடுப்பனவு செய்து தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தினது 21(1) ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டின் வாடகை வருமானம் மீதான பெறுமதி சேர் வரி அறிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 231(1) மற்றும் 237(ஆ) என்பன | வழங்குநர்களது 37 கொடுப்பனவு உறுதிச் சான்றிதழ்களது ரூபா 3,207,503 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்படுகையில் கொடுப்பனவுக்குரிய இன்வொய்சுகளும் பொருட் பெறுவனவுக் குறிப்புகளும் (GRN) கொடுப்பனவு உறுதிச்சான்றுகளுடன் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ii) நிதிப்பிரமாணங்கள் 257 மற்றும் 264 என்பன | ஒவ்வொரு கொடுப்பனவு உறுதிச் சான்றையும் சான்றுறுதிப்படுத்தாமலும் பற்றுச்சீட்டு இல்லாதும் 312 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின்போது ரூபா 56,579,468 |

| | | |
|---|---|---|
| | | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 131 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் ரூபா 23,692,235 கொடுப்பனவு செய்யப்படும்போது அந்த உறுதிச்சான்றுகளுடன் பொருட் கட்டளைகளும் பொருட் பெறுவனவு அறிவித்தல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றல் அறிக்கைகளைப் பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து காலாண்டு முடிவுற்று 30 நாட்களுக்குள் அவற்றை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 24,862,164 நிகர இலாபமாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 3,917,020 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 20,945,144 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானம் ரூபா 29,684,492 குறைவடைந்தபோதும், மீண்டெழும் செலவினத்திற்கென பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 25,000,000 கூடுதலாகப் பெறப்பட்டமையும் நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 24,063,991 குறைவடைந்தமையும் மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யின் 2013 முதல் 2014 வரை நிகர இலாபம் பெறப்பட்டபோதும், 2015 ஆம் ஆண்டில் நிகர நட்டம் ஏற்பட்டு மீண்டும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின்போது நிகர இலாபம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியத்தையும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தையும் மீண்டும் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் சபையின் பங்களிப்பு ரூபா 112,348,260 ஆகியதுடன வருடாந்தம் அதிகரித்தவாறு மீளாய்வாண்டின்போது அது ரூபா 162,199,937 ஆகியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

சபையின் 2014 முதல் 2017 வரையான கடந்த 04 ஆண்டுகளது நடைமுறைச் சொத்துக்களது விகிதம் முறையே 1.41, 1.03, 0.96, 0.89 என்பனவாகும். நடைமுறை பொறுப்பு அதிகரிப்புச் சதவீதம் நடைமுறைச் சொத்து அதிகரிப்புச் சதவீதத்தை விட அதிகரித்தமை நடைமுறைச் சொத்துக்களது விகிதம் குறைவடையக் காரணமாகியது. துரித சொத்துக்களது விகிதம் 2014 முதல் 2017 வரை முறையே 0.36, 0.24, 0.23, 0.24 என்பனவாகும். நடைமுறைச் சொத்துக்களில் பெருமளவு சதவீதமான கையிருப்பு நிருபணம் ஆவதால் துரித சொத்துக்களது விகிதம் குறைவடைய ஏதுவானது. சபையின் குறுகிய கால திரவவியல் மிகவும் குறைந்த மட்டத்திலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வியாபார நடவடிக்கைகளைக் குறுகிய கால மற்றும் நெடுங்காலத் தொலை நோக்குடன் முகாமைத்துவமிடக்கூடியவாறு குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், ஓராண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தை 2017 ஆம் ஆண்டிற்கெனச் சபை தயாரித்திருந்தது. அத்திட்டம் 2017 டிசெம்பர் 08 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குக் கூட்டிணைந்த திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படாததுடன், தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள மனிதவள அபிவிருத்தி திட்டத்தில் ஒவ்வொரு நோக்கத்திற்குமான நிதியேற்பாடு மற்றும் இலக்கு என்பன உள்ளடக்கப்படாதுமிருந்தன.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட சபையின் அதிகாரங்களும் பணிகளும் நிறைவேற்றப்படுதல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் உள்ளூரில் விற்பனையாகிய கைப்பணிப் பொருட்கள் ரூபா 773,477,578 ஆகியபோதும், மீளாய்வாண்டில் அப்பொருட்களது விற்பனை ரூபா 721,155,156 வரை ரூபா 52,322,422 குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது விசேட பொருட் கட்டளைகளின் கீழ் ரூபா 45,000,000 கூட்டுத்தொகையில் இலக்கிடப்பட்ட விற்பனையை அடையத் திட்டமிடப்பட்டபோதும், உள்ளவாறான விற்பனை ரூபா 26,419,508 ஆகியமையால் இலக்கிடப்பட்ட விற்பனைப் பெறுமதியில் 58.7 சதவீதமான விற்பனை மாத்திரமே எய்தப் பெற்றது.

(இ) உள்ளூர் கைப்பணியாளர்களது உற்பத்திப் பொருட்களது கொள்வனவு 2013 ஆம் ஆண்டின் பின்னர் குறைவடையும் போக்கு அவதானிக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 354,146,791 ஆகவிருந்த அக்கொள்வனவுகள் 2017 ஆம் ஆண்டில் ரூபா 341,162,863 வரை ரூபா 12,983,928 குறைவடைந்திருந்தது.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நுவரெலியா மற்றும் மாத்தளை காட்சியங்களைப் பழுதுபார்த்து ஆரம்பிப்பதற்கும் மிரிஸ்ஸ, பாசிக்குடா, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் புதிய 3 காட்சியங்களை ஆரம்பிப்பதற்கும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் 2 புதிய கொள்வனவு நிலையங்களையும் 02 வெளிநாடுகளில் விற்பனை மேம்பாட்டுக்கான 02 கடைகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தபோதும், சபையின் நிதி நெருக்கடி காரணமாக அந்நோக்கங்கள் அமுலாக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த காலப்பகுதியின்போது வரியை முறைப்படி செலுத்தாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,786,956 பெறுமதி சேர் வரியும் ரூபா 24,834,476 நாட்டைக் கட்டியெழுப்பும் வரியும் ரூபா 19,646,612 பொருளாதார சேவைக் கட்டணமும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தன.

(ஆ) சபையின் முன்னாள் முகாமைத்துவம் கடந்த காலங்களில் முறையாக நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்ளாமையால் திறைசேரியிடமிருந்தும் 2 அரச வங்கிகளிடமிருந்தும் பெற்றிருந்த நெடுங்காலக் கடனாகிய ரூபா 364,484,163 மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டியிருந்தது. அவற்றிற்குப் புறம்பாக, மீளாய்வாண்டின்போது ரூபா 175,449,133 கூட்டுத் தொகையுடைய குறுகிய காலக் கடனும் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே, இக்கடனுக்கான ரூபா 68,609,778 உடன் மேலதிகமாகப் பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்றுக்கு வட்டியாக ரூபா 1,430,334 மீளாய்வாண்டின்போது செலுத்தவேண்டியேற்பட்டது.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தும்முல்ல காட்சியகம் மற்றும் கொழும்பு கோட்டை லக்சல கட்டிடம் என்பவற்றின் பொருட்டு கொழும்பு மாநகர சபைக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய தீர்வை, வரி என்பவற்றினது கூட்டுத் தொகை முறையே ரூபா 3,381,840 மற்றும் ரூபா 9,485,849 என்பனவாகும். இவ்வரி நிலுவையைச் செலுத்துமாறும் அவ்வாறு செலுத்தாதுவிடின் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்கு இசைவாக முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 05 நடைமுறைக் கணக்குகள் செயலற்றவாறிருந்தன. அவற்றுள் 03 கணக்குகள் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சாதகமான ரூபா 228,369 கூட்டுத் தொகை மீதியைக் கொண்டிருந்ததுடன், மற்றுமொரு நடைமுறைக் கணக்கில் ரூபா 986,112 வங்கி மேலதிகப்பற்று மீதியும் இன்னுமொரு நடைமுறைக் கணக்கில் மீதி இல்லாதுமிருந்தது. செயற்பாடாற்றிருக்கும் இவ்வங்கிக் கணக்குகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின்போது கோட்டை லக்சல கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்குத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்குப் புறம்பாக ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இந்நிர்மாண வேலைகளுடன் தொடர்புடைய நிர்வாகக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை கைப்பணிகள் சபைக்கு வழங்கிய அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்குச் சபை ரூபா 30,069,309 கூடுதலாக வழங்கியிருந்ததை அறிவித்திருந்தது. சட்டமா அதிபர் திணைக்களம் 2017 யூன் 02 ஆந் திகதியன்று இத்தொகையைக் குறித்த ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுமாறு அழைப்பாணை விடுத்திருந்தபோதும், ஒப்பந்தகாரர் அக்கொடுப்பனவை நிராகரித்திருந்தார். மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு இவ்விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஊ) கட்டுபெத்தை தச்சுத் தொழில் செயற்திட்டப் பிரிவின் கட்டிடம் பயன்படுத்தப்படாதிருக்கையில் கோட்டையில் உள்ள லக்சல கட்டிடத்தில் நடாத்தப்பட்ட சபையின் கணக்குப் பிரிவு அடங்கலான பல பிரிவுகள் நடாத்தப்படுவதற்கு பிறிதொரு நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் மீளாய்வாண்டின்போது கட்டிடங்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கென மீளாய்வாண்டின்போது கட்டிட வாடகையாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 9,000,000 ஆகும்.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

தும்முல்ல காட்சியக வளாகத்தில் நடைபெறும் விற்பனைச் சந்தையின்போது விற்பனை செய்யப்படாது எஞ்சிய ரூபா 789,574 கூட்டுத் தொகையுடைய ஆடைகள் மற்றும் ஆடைகளோடு இணைந்த உற்பத்திப் பொருட்கள், பிற காட்சியங்களில் விற்பனை செய்யப்படாது எஞ்சி, கட்டுபெத்தை களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 303,500 கூட்டுத் தொகைப் பெறுமதியுடைய டீசேர்ட் மற்றும் ஏனைய ஆடைகள் என்பன கட்டுபெத்தை களஞ்சியத்தில் தேங்கியிருந்தன.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2012 நவெம்பர் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், காலி உனவடுன சலுசல கிளை அமைந்துள்ள 01 ஏக்கர், 30.6 பேர்ச்சர்ஸ் காணியும் கட்டிடமும் கைப்பணிச் சபைக்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கென 2012 டிசெம்பர் 12 ஆந் திகதி சபையால் கொள்வனவுத் தொகையாக ரூபா 15,248,575 வரையறுக்கப்பட்ட அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதத்தில் கணக்காய்வு நடைபெறும் சந்தர்ப்பத்திலும் இக்காணியை சுவீகரிக்கும் பணிகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான சிக்கல்கள் தீர்வு செய்யப்படாதிருந்தன. கொடுப்பனவு செய்யப்பட்ட இத்தொகை சபையால் தவறுதலாக கோட்டை லக்சல காணிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தச்சுத் தொழிலாளர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக கட்டுப்பெத்தை காலி விதி 282 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர், 21 பேர்ச்சர்ஸ் காணி, ஒரே நேரத்தில் 80 மாணாக்கரைப் பயிற்றுவிக்கக்கூடிய 11,200 சதுர அடி தச்சு வேலையைப் பயிற்றுவிக்கும் தொழிற்சாலை மற்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ளன இயந்திர சாதனங்கள், கற்பிக்கும் உபகரணங்கள், 2,090 சதுர அடியான மரப்பலகைக் களஞ்சியம் மற்றும் 40 இரு மடிப்புக் கட்டில்களைக் கொண்ட 4,680 சதுர அடியான இரு மாடி விடுதி என்பன 06 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாத சொத்துக்களாக இருந்தன.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 08 ஆண்டுகளுக்கு மேலாக இலகு பொறியியலைப் பயிற்றுவிப்பதற்குப் பயன்படுத்தாமையால் பாணந்துறை கெசெல்வத்தையில் அமைந்துள்ள இலகு பொறியியல் பயிலுநர் நிறுவனத்தில் உள்ள ரூபா 3,988,500 கூட்டுத் தொகைப் பெறுமதியுடைய இலகு பொறியியல் உபகரணங்கள், ஒரே தடவையில் 30 மாணாக்கரைப் பயிற்றுவிக்கக்கூடிய இரு மாடிக் கட்டிடம், பழைய கட்டிடம் மற்றும் ஏறக்குறைய 01 றூட், 02 பேர்ச்சர்ஸ் காணி என்பன பயன்படுத்தப்படாதிருந்ததுடன், இச்சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 1,045,969 பாதுகாப்புக் கட்டணமாக சபை செலுத்த வேண்டியேற்பட்டது.

## 4.6 சபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள்

2010 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியின்போது முன்னாள் முகாமைத்துவம் பொறுப்பேற்ற ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் முறையாக நிறைவேறாமையால் சபைக்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு மீளாய்வாண்டின்போது வழக்கு மற்றும் சட்டத்தரணிகள் கட்டணம் என ரூபா 672,342 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/ஜீ3/60/2 ஆம் இலக்க 2012 டிசெம்பர் 21 ஆந் திகதிய பதவியணியினரை அங்கீகரிக்கும் கடிதத்தின் பிரகாரம் சபையின் 127 பதவியணியினர் மற்றும் 67 ஒப்பந்த அடிப்படையிலான பதவியணியினர் என அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 194 ஆகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் உள்ளவாறான நிரந்தர பதவியணியினரது எண்ணிக்கை 82 ஆவதுடன், அப்பதவியணியின் 47 பேர் அங்கீகரிக்கப்படாத பதவிகளில் இருந்தனர். சபையின் உள்ளவாறான ஒப்பந்த அடிப்படையிலான பதவியணியினர் 76 ஆகும். அப்பதவியணியிலும் 21 ஊழியர்கள் அங்கீகரிக்கப்படாத பதவிகளில் மீளாய்வாண்டளவில் பணியில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது சபை தீவடங்கிலும் நடாத்தி வரும் 12 காட்சியகங்களில் 07 காட்சியங்களில் களஞ்சியப் பொறுப்பு முகாமையாளர்கள் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிராததுடன், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அக்காட்சியங்களின் சகல பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

**5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி**

---

**5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களையும் இலக்குகளையும் அடைதல்**

---

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதுடன், இலங்கை கைப்பணிகள் சபை மீளாய்வாண்டின் பொருட்டு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கையின் பாரம்பரிய கிராமிய கைப்பணியாளர்களது கலை நுட்பம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் போன்றே உள்ளவாறு ஏற்பட்ட செலவினமும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்தமையால் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அடையும் பொருட்டு எதிர்பார்க்கப்பட்ட உள்ளூர் கலைஞர்களது உற்பத்திப் பொருட்களின் கொள்வனவும் குறைவடைந்திருந்தது.

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கின் பிரகாரம், சகல பிரிவுகளிலும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் மற்றும் செயற்பட்டவாறுள்ள வழங்குனர்கள் ஆகியோரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியபோதும், நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக மீளாய்வாண்டின்போது வழங்குனர்களிடமிருந்து பொருட் கொள்வனவு செய்யும் எண்ணிக்கை குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 பொருட் கொள்வனவும் ஒப்பந்த நடவடிக்கைகளும்

#### 6.2.1 பொருட் கொள்வனவு

தும்முல்ல லக்சல காட்சியகத்தின் உள்ளேயும் வெளியேயும் Light Board மற்றும் Light Boxes என்பவற்றை வழங்கி அவற்றைப் பொருத்துவதற்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனம் ஒன்றிடம் ரூபா 2,332,074 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) க்கமைய ஒப்பந்தகாரருடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடாததுடன், அக்கோவையின் 5.3.11 க்கமைய கேள்விக்கான பிணை முறியை பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 10 செலவின விடயங்களில் 31 முதல் 469 சதவீதம் வரையிலான ரூபா 40,959,557 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபையானது மீளாய்வாண்டின்போது 02 மூலதனச் செலவினங்களுக்கு ரூபா 2,227,093 கூட்டுத் தொகையைச் செலவழித்திருந்தபோதும், பாதீட்டில் அதற்கான நிதியேற்பாடு இருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட விற்பனை வருமானத்தை உள்ளவாறான விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுகையில் 06 விற்பனைக் கூடங்களில் உள்ளவாறான விற்பனை வருமானம் 19 முதல் 43 சதவீதம் வரை ரூபா 4,967,251 தொடக்கம் ரூபா 10,464,526 வரை குறைவடைந்திருந்தது.

### 6.4 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளது ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | முறையான கட்டுப்பாடும் அங்கீகாரமும் இல்லாது நாட்குறிப்புகளை இடுதல் மற்றும் இலக்கமற்ற நாட்குறிப்புகள் நிலவுதல். |
| | (ii) | கணனிக் கணக்கீட்டு முறையின் மூலம் பரீட்சை மீதியையும் நிதிக்கூற்றுக்களையும் தயாரிக்காமை மற்றும் முன்னைய திகதி ஒன்றைக் குறிப்பிட்டு கொடுக்கல் வாங்கல்களை தற்போதைய கணனிக் கணக்கீட்டு முறைமையில் கணக்கிலிடும் விசேட ஆற்றலின் காரணமாக கணக்குகளது மீதிகள் முன் கூட்டியே கணக்காய்வு செய்யப்படுவதற்கான அபாயம் நிலவுதல். |
| | (iii) | காசேடு எழுத்து மூலம் பேணப்படாமை, கொடுப்பனவுகளுக்குரிய நேரெதிர் பேரேட்டுக் கணக்குகள் காசேட்டில் பதிவு செய்யப்படாமை மற்றும் உறுதிச் சான்றுகளது இலக்கம் வரிசைக் கிரமமாக அமையாதிருத்தல். |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | | நேரடிக் கையிருப்பு சரி, பிழை பார்த்தலுக்கு ஏறக்குறைய 07 மாதங்கள் செல்வதும் காட்சியகப் பொருட்கள் விற்பனையாகாது இருப்பதால் அவற்றை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்காமையும். |
| (இ) பதவியணி நிர்வாகம் | | நிறுவனத்தின் பதவியணியில் 60 சதவீதம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காலத்தின் தேவைக்கேற்ப பதவியணியை அங்கீகரித்து அதற்கமைய ஆட்சேர்ப்பை மேற்கொள்ளாமை. |
| (ஈ) விற்பனை முகாமைத்துவம் | | உள்ளூர் சந்தையில் நெடுங்காலமாக விற்பனை வீழ்ச்சியடைந்திருக்கும் கைப்பணிப் பொருள் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமாகவும் வெளிநாட்டு விற்பனை தொடர்பாகவும் நிறுவனம் மிகவும் குறைவான கவனம் செலுத்தி உள்ளமை. |
| (உ) முற்பணக் கட்டுப்பாடு | | சபையால் பேணப்படும் முற்பணப் பதிவேடு 371 ஆம் 372 ஆம் நிதிப்பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படாமை |